தமிழ்நாடு முழுவதும் தினசரி பிரிண்ட் ஆகி வெளிவரும்
தினதமிழ்
நாளிதழுக்கு சேலம், கரூர், திருநெல்வேலி, விழுப்புரம், கடலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்டம் மற்றும் தாலுகா நிருபர்கள் தேவை. தொடர்புக்கு
9994466200–9080728304



# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5



உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர



dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 23.12.2025 . மலர் 03 . இதழ் 353. செவ்வாய்க்கிழமை dhinatamil . NAGERCOIL EDITION . 23.12.2025 . VOL 03 . ISSUE 353. TUESDAY . 4 PAGES . Rs. 5


## அமைச்சர்களுடன் நடந்த பேச்சுவார்த்தை தோல்வி

# ஜனவரி 6 முதல் காலவரையற்ற போராட்டம்

## அரசு ஊழியர், ஆசிரியர் சங்கங்கள் அறிவிப்பு

சென்னை, டிச.23-

பழைய ஓய்வூதியம் திட்டம் உள்பட முக்கிய கோரிக்கைகள் தொடர்பாக அமைச்சர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், திட்டமிட்டபடி ஜனவரி 6 முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் நடத்தப்படும் என அரசு ஊழியர் - ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக அறிவித்துள்ளன.

அரசு ஊழியர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டம், அரசு துறைகளில் காலியாகவுள்ள லட்சக்கணக்கான பணியிடங்களை நிரப்புவது, 7-வது ஊதிய க்குழு நிலுவைத்தொகை வழங்குவது, ஊதிய முரண்பாடுகளை களைவது என்பன உள்பட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர் - ஆசிரியர் சங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ - ஜியோ சார்பில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

ஆர்ப்பாட்டம், அடையாள உண்ணாவிரதம், கோரிக்கை முழுக்கம் என பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் நடத்தி வந்த நிலையில், கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் ஜனவரி 6 முதல் காலரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என ஜாக்டோ - ஜியோ கூட்டமைப்பு அண்மையில் அறிவித்தது.

இந்நிலையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கிய கோரிக்கைகள் தொடர்பாக அரசு ஊழியர் -ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகளுடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் ஆகியோர் இன்று தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதில் ஜாக்டோ-ஜியோ, போட்டோ ஜியோ உள்ளிட்ட அரசு ஊழியர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். அரசு சார்பில் பங்கேற்ற அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் ஒவ்வொரு சங்கத்தின் நிர்வாகிகளின் கருத்துகளையும் கோரிக்கைகளையும் கேட்டனர். காலை 11.15 மணியளவில் தொடங்கிய பேச்சுவார்த்தை மதியம் 2 மணிக்கு மேல் நீடித்தது.

அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக பேசிய ஜாக்டோ - ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் மு..பாஸ்கரன், "அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நாங்கள் அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் இல்லை. எனவே, நாங்கள் ஏற்கனவே அறிவித்தபடி ஜனவரி 6 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்றார்.


## மயிலாடியில் பாஜகவில் இணைந்த பெண்கள்



கன்னியாகுமரி, டிச.23-

பாஜக குமரி கிழக்கு மாவட்ட தலைவர் கோபகுமார் ஆலோசனையின்படி மாவட்டம் முழுவதும் உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் மயிலாடி பேரூர் பாஜகவில் ஏராளமான பெண்கள் நேற்று இணைந்தனர். இந்த நிகழ்விற்கு பாஜக அகஸ்தீஸ்வரம் ஒன்றிய தலைவர் அருள் சிவா தலைமை தாங்கினார். ஒன்றிய உள்ளாட்சி பிரிவு தலைவர் பாபு முன்னிலை வகித்தார். மயிலாடி பேரூராட்சி தலைவர் விஜயலட்சுமி பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் மயிலாடி மிஷன்விளையை சேர்ந்த தொழிலதிபர் பத்மாவதி தலைமையில் ஏராளமான பெண்கள் பாஜகவில் இணைந்தனர்.

## சுசீந்திரம் தாணுமாலயசுவாமி கோவில் மார்கழி பெருந்திருவிழா வரும் 25ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்குகின்றது



சுசீந்திரம்.டிச.22–

சுசீந்திரம் தாணுமாலயசுவாமி கோவில் சிவன் பிரம்மா விஷ்ணு ஒரு சேர அமைந்திருக்கும் பிரசித்தி பெற்ற தலமாக விளங்குகின்றது இந்த கோவிலில் ஆண்டுதோறும் மார்கழி திருவிழா 10 நாட்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம் அதுபோல இந்த ஆண்டு மார்கழி பெருந்திருவிழாவிற்காக வரும் 25ஆம் தேதி கொடியேற்றத்துடன் 10 நாட்கள் வெகு விமர்சையாக மார்கழி பெருந்திருவிழாநடைபெறுகிறது அதனை முன்னிட்டு இன்று மஞ்சள் வாழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சி தொண்டு தொட்டு நடைபெறும் நிகழ்ச்சி இதில் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் சுற்று வட்டார பகுதியில் உள்ள கிராம பொதுமக்களை பத்து நாள் திருவிழாவை சிறப்பிப்பதற்காக அழைக்கும் நிகழ்ச்சி மஞ்சள் வழங்கும் நிகழ்ச்சி இதில் நிகழ்ச்சி நிரல் வெற்றிலை பாக்கு ஆகியவற்றை ஊர் பெரியவரிடம் கொடுத்து அவர்களை பத்து நாள் திருவிழாவை நல்ல முறையில் நடத்தி தர மன்னர் ஆட்சி காலத்தில் இருந்து நடைமுறையில் இருக்கும் நிகழ்ச்சியாகும் இந்த நிகழ்ச்சி இன்று காலை ஒன்பது முப்பது மணி அளவில் நடைபெற்றது வருகின்ற 25 ஆம் தேதி காலை 6 மணிக்கு மாணிக்கவாசகர் பூஜை 8 மணிக்கு மேல் தாணுமாலைய சுவாமி சன்னதியின் எதிரே உள்ள கொடிமரத்தில் தெற்கு மடம் ஸ்தானிகர் கொடியேற்றி வைக்கிறார் வட்டப்பள்ளி மடம் ஸ்தானிகர் சிறப்பு பூஜைகள் கொடுமரத்திற்கு செய்கின்றார் அதனைத் தொடர்ந்து திருமுறை பெட்டக ஊர்வலம் நடைபெறுகிறது மூன்றாம் திருவிழாவான 27 ஆம் தேதிஇரவு 10.30 மணிக்கு சுவாமி வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது அதனைத் தொடர்ந்து கோட்டார் வலம்புரி விநாயகர் மருங்கூர் சுப்பிரமணியசுவாமி வேளிமலை குமாரசுவாமி ஆகியோர் தனது தாய் தந்தையர் கோவிலில் நடக்கும் நிகழ்ச்சியை காண வரும் மக்கள்மார் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது ஐந்தாம் திருவிழாவான 29ஆம் தேதி காலை 5 மணிக்கு பஞ்சமூர்த்தி தரிசனம் காலை 6 மணிக்கு தாணுமாலய சுவாமி கோவில் தெற்கு பகுதியில் அமைந்துள்ள வீர மார்த்தாண்ட விநாயகர் கோவில் முன்பு அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் சுவாமி அம்பாள் பெருமாள் மும்மூர்த்திகளையும் கருடன் வலம் வரும் கருட தரிசன நிகழ்ச்சி நடைபெறுகிறது மாலை 5.30 மணிக்கு ஊஞ்சல் மண்டபத்தில் வைத்து சுவாமிக்கு அஷ்டாபிஷேகம் நடைபெறுகிறது எட்டாம் திருவிழா அன்று காலை 8 மணிக்கு சிதம்பரேஸ்வரர் வீதி உலா வரும் நிகழ்ச்சியும் பேரம்பல கோவில் முன்பு நடராஜப் பெருமாள் ஆனந்த நடனக் காட்சியும் இரவு 8 மணிக்கு சிதம்பரேஸ்வரர் வீதி உலா வருதல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது 9ம் திருவிழா அன்று காலை 9 .15 மணி அளவில் தேரோட்டம் நடைபெறுகிறது இதில் அலங்கரிக்கப்பட்ட விநாயகர்தேரில் விநாயகரும் சுவாமி தேரில் சுவாமியும்அம்பாள் தேரில் அம்பாளையும் அமரச் செய்து தேரோட்டம் நடைபெறுகிறது

நள்ளிரவு 12 மணி அளவில் சப்தவர்ண காட்சியும் 10 ம்திருவிழா அன்று அதிகாலை 4:00 மணிக்கு ஆருத்ரா தரிசனமும் மாலை 5 மணிக்கு நடராஜமூர்த்தி வீதி உலா வருதல் நிகழ்ச்சியும் இரவு 9 மணிக்கு ஆராட்டு விழாவும் நடைபெறுகிறது இதற்கான ஏற்பாடுகளை குமரி மாவட்ட திருக்கோவில்களின் இணை ஆணையர் ஜான்சி ராணி தலைமையில் கண்காணிப்பாளர் ஆனந்த் கோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர் கண்ணன் மற்றும் தாணுமாலையா சுவாமி கோவில் பக்தர்கள் பொது மக்கள் இணைந்து செய்து வருகின்றனர்

## குமரி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

நல்லூர், டிசம்பர். 23-

குமரி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நாகர்கோவில் ஒழுகினசேரியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.இக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளரும்,மேயருமான திரு.மகேஷ் அவர்கள் தலைமை தாங்கி பேசினார்.அப்போது அவர் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நிறைவு பெற்று,வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது அதன்படி குமரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் குளச்சல் தொகுதிகளில் 81 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.எனவே வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்று சரிபார்க்க வேண்டும்,விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கவும்,புதிதாக வாக்காளர்களை சேர்க்கவும்,நமது நிர்வாகிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.கன்னியாகுமரி தொகுதியில் ஏற்கனவே 310 வாக்குச்சாவடிகள் இருந்தது தற்போது 50 வாக்குச்சாவடிகள் அதிகரித்து 360 வாக்குச்சாவடிகளாக உயர்ந்துள்ளது.நாகர்கோவில் தொகுதியில் 275 வாக்குச்சாவடிகளாக உயர்ந்துள்ளது,குளச்சல் தொகுதியில் 316 வாக்குசாவடிகளாக உயர்ந்துள்ளது.புதிதாக உருவாக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு பாக முகவர்களை நியமிக்க வேண்டும்,வாக்குச்சாவடிகள் உயர்ந்துள்ளதால் வாக்காளர்களின் வாக்குகளும் மாறி இருக்க வாய்ப்புள்ளது,எனவே யார்?யாருக்கு எந்த வாக்குச்சாவடியில் ஓட்டு உள்ளது என்பதை கண்டறிந்து அதை தெரியப்படுத்த வேண்டும்.வருகின்ற சட்டசபை தேர்தல் முக்கியமான தேர்தல் ஆகும்,இந்த தேர்தலில் குமரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுட்டிக்காட்டும் வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க உழைக்க வேண்டும். இரண்டாவது முறையாக மு.க.ஸ்டாலின் அரியணையில் அமர வைக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று அவர் கூறினார்.

## குமரி குளங்களில் தாமரைப்பூ வளர்க்கும் கும்பல் மீது நடவடிக்கை பாசன துறை சார்பில் எஸ்.பி.யிடம் புகார் !

நாகர்கோவில், டிசம்பர் 23–

குமரி மாவட்ட பாசன துறை தலைவர் வின்ஸ் ஆன்றோ தலைமையில் நேற்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலினிடம், குளங்களில் அத்துமீறி தாமரைப் பூக்கள் வளர்ப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு அளித்தனர்.

இதுவரை பல்வேறு காவல் நிலையங்களில் அழிக்கப்பட்ட சுமார் 29 புகார்களையும் ஒருங்கிணைத்து இந்த புகார் அளிக்கப்பட்டது. பின்னர் இந்த புகார் மனு தொடர்பாக வின்ஸ் ஆன்றோ கூறியதாவது:

குமரி மாவட்டத்தில் உள்ள குளங்களில் களைக் கொல்லி மருந்துகளையும் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தி உச்சநீதிமன்ற உத்தரவுக்கு மாறாக தாமரை பூ வளர்த்து அதை பறித்து அதன் மூலம் லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்து வருகின்றனர்.

இவ்வாறு தாமரைப்பூ பறிப்பது ரவுடிகள் இடையே கோஷ்டி மோதல்களும் ஏற்பட்டு வருகின்றன. இது தொடர்பாக ஏற்கனவே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தினோம்.

அப்போது நீர்வளத் துறை அதிகாரிகள் தரப்பில் காவல் நிலையங்களில் இது தொடர்பாக புகார்கள் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். இதுவரை அளித்த புகார்களை ஒருங்கிணைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மூலமாக அளித்து அதன் அடிப்படையில் நீர்வளத்துறை மற்றும் காவல்துறை இணைந்து இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் முதல் கட்டமாக இதுவரை குமரி மாவட்ட காவல் நிலையங்களில் குளங்களில் அத்துமீறி தாமரை பூ வளர்ப்பது தொடர்பாக அளிக்கப்பட்ட சுமார் 29 புகார்களை ஒருங்கிணைத்து எஸ்பி ன் கவனத்திற்கு அளித்திருக்கிறோம்.

இந்த விவகாரத்தில் காவல்துறை, நீர்வளத் துறை இணைந்து ஒரு நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். உச்சநீதிமன்ற உத்தரவிற்கு மாறாக குளங்களில் பல்வேறு வகையான ரசாயன மற்றும் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தி தாமரை வளர்க்கப்படுவதால் மீன்கள் பாதிக்கப்படுகிறது. தாமரை வளர்க்க தடை விதிக்கும் நீர்வளத்துறை அதிகாரிகள் மற்றும் பாசனத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு கொலை மிரட்டல்களும் வருகின்றன. எனவே இதை தடுக்கும் வகையில் காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். சஹ கார் பாரதி குமரி மாவட்ட தலைவர் சகாயம், மற்றும் பாசன துறை நிர்வாகிகள் உடன் வந்திருந்தனர்.

## கலைஞர் உருவாக்கிய மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் அதிக திட்டங்களை செயல்படுத்தியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் !

### கிறிஸ்துமஸ் பெருவிழாவில் ராஜா எம்எல்ஏ சிறப்புரை



சங்கரன்கோவில், டிச.23-

சங்கரன்கோவில் சிறப்பு குழந்தைகள் பள்ளியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ சிறப்புரை

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ராஜபாளையம் சாலையில் டி டி டி ஏ வளாகத்தில் அமைந்துள்ள பரிபவுல் சிறப்பு குழந்தைகள் பள்ளி மற்றும் சிறப்பு குழந்தைகள் தொழிற்பயிற்சி நிலையத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை பெருவிழா நிகழ்ச்சி நடந்தது நிகழ்ச்சிக்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார். சேகர தலைவர் மற்றும் சிறப்பு குழந்தைகள் பள்ளி சேர்மன் இஸ்ரவேல்தனசிங், சேகர தலைவர்கள் சுப்புலாபுரம் கிங்ஸ்லி ஜெயக்குமார், வாகைகுளம் ஞானபால், நெடும்பாறை முத்துராஜ், ஜே.டி நகர் சிமியோன்,சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், நகர செயலாளர் பிரகாஷ்,மாவட்ட சிறுபான்மையினர் அணி யோசேப்பு முன்னிலை வகித்தனர். இதில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு குழந்தைகளுக்கு கேக்குகள் மற்றும் புத்தாடைகள் வழங்கி திமுக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பேசியதாவது,

இந்த சிறப்பு குழந்தைகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் பங்கேற்பது நம் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சி போல் உள்ளது. மேலும் இந்த குழந்தைகளை சிரமம் இன்றி

இருக்கும் வகையில் கவனித்து வரும் நிர்வாகத்தினர் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும்,

தமிழ்நாட்டில் உடல் குறைபாடு உள்ளவர்களின் திறமைகளை கண்டறிந்து அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் என்று பெயர் சூட்டி, அவர்கள் வாழ்வில் மேம்பட அவர்களுக்கென தனி துறையை உருவாக்கி அவர்களை அழகு பார்த்தவர் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். கலைஞரைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கான உதவித்தொகையை உயர்த்தி வழங்கியுள்ளார் கல்வி சார்ந்த திட்டங்களுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கி வருகின்றார் எனவும், மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டிற்கு சிறப்பு கல்வி, கண் பார்வை அளவியல், கேட்டல் மற்றும் பேச்சு பயிற்சி, பிசியோதெரபி, உளவியல் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது எனவும், பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் செய்து வருவதால் உள்ளாட்சி அமைப்புகளில் நியமன உறுப்பினர்கள்

எல்லா தரப்பு மக்கள் அனைவருக்கும் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்று செயல்படக்கூடிய திராவிட மாடல் அரசில் சட்டமன்ற உறுப்பினராக நான் உள்ளது மிக பெருமையாக உள்ளது. சிறுபான்மையினர் நலத்தில் அக்கறை காட்டி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் கிறிஸ்தவர்கள் ஜெருசலம் சென்று வருவதற்கு கூடுதலாக நிதி மேலும் ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்கு சென்னையில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டும் பணியை துவக்கி வைத்துள்ளார். நாம் அனைவரும் மத வேறுபாடுகளை களைந்து அனைவரும் சமம் என்ற கோட்பாடுடன் வாழ வேண்டும் எனவும், வருகின்ற கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் முத்துச்சாமி, மோகன்தாஸ்,ஓய்வு பெற்ற தாசில்தார் ஜேம்ஸ் வெள்ளத்துரை, வெங்கடேசன், பள்ளி தாளாளர் பால்பாண்டி,, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், முன்னாள் வர்த்தக அணி பத்மநாபன், நகராட்சி கவுன்சிலர்கள் ராஜாஆறுமுகம், செல்வராஜ், மாவட்ட ஐடி விங் அமைப்பாளர் கிப்ட்சன் , துணை அமைப்பாளர் சிவசங்கரநாராயணன், இளைஞர் அணி ஜான்சன் மற்றும் ஜெயக்குமார், பாலாஜி, பாரதிராஜா மற்றும் பள்ளி நிர்வாகிகள், சிறப்பு குழந்தைகளின் பெற்றோர்கள்,ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## குமரி மருத்துவக் கல்லூரியில் 200 பேர் செவிலியர்கள் காத்திருப்பு போராட்டம்

நாகர்கோவில், டிசம்பர் 23–

தமிழ்நாடு மருத்துவ தேர்வாணையம் செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் கடந்த 19ம் தேதி முதல் பணி நிரந்தரம் செய்யக்கோரி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்து வருகிறது.

இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் எம்.ஆர்.பி. செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குமரி மருத்துவக் கல்லூரியில் நேற்று 3வது நாளாக செவிலியர்கள் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. நேற்று போராட்டத்திற்கு வந்த செவிலியர்கள் கலைந்து செல்லாமல் விடிய விடிய தொடர்ந்து காத்திருப்பு போராட்டத்தை நடத்தினர். போராட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமையில் போராட்டம் நடந்தது. நேற்று காலை நடந்த ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்ட செவிலியர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர்.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மனு அளிக்க வந்தவர்களிடம் போலீசார் சோதனை

நாகர்கோவில், டிசம்பர். 23–

நாகர்கோவிலில் குமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் காரணமாக மனுக்களுடன் வந்த மக்களிடம் போலீசார் தீவிர சோதனை நடத்தினர்.

குமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் திங்கள் கிழமை தோறும் நடைபெறுகின்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று காலை தொடங்கி நடந்தது. இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்க கேட்டும் பொதுமக்கள் கோரிக்கை மனுக்கள் அளித்தனர். கலெக்டர் அலுவலக நுழைவு வாயிலில் கணினிகளில் மனுக்கள் ஆன்லைனில் பதிவு செய்யும் பணிகள் நடந்தது. நாஞ்சில் கூட்ட அரங்கில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால், அருகில் உள்ள அறையில் மனுக்கள் பெறும் நிகழ்வு நடந்தது. அந்தப் பகுதியில் மனுக்கள் எழுதிக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வருகின்றவர்கள் தங்களது கோரிக்கைகள் நிறைவேறவில்லை என்று கூறி அவ்வப்போது அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டங்களில் ஈடுபடுவதும் நடைபெற்று வருகிறது. இதனை தடுக்கும் வகையில் கலெக்டர் அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. பொதுமக்கள் கொண்டு வந்த உடமைகள், தண்ணீர் பாட்டில்கள், போன்றவற்றை போலீசார் கலெக்டர் அலுவலக வாசல் பகுதியில் தீவிரமாக பரிசோதனை செய்தனர். இதனை தொடர்ந்து கலெக்டர் அலுவலகத்தில் கூடுதல் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.


தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# தென்காசியில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தென்காசி, டிச.23–
தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.
இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 646 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.
முன்னதாக கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை பண்ணைத்தொழில் அமைப்பது குறித்து 20 நாட்கள் நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சியில் பங்கு பெற்ற 23 விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கமல் கிஷோர் வழங்கினார்.
இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.கோயில்ராஜா, தனித்துணை ஆட்சியர் (ச,பா.தி) நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு அறிவு திருக்கோயிலில் உலக தியான தினம்



ஈரோடு, டிச. 23–
பிரதமர் மோடி முயற்சியால் ஜூன் 21 ம் தேதி சர்வதேச யோகா தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் யோகா தினம் கொண்டாடப்பட்டு வருகிறது .இதே போல ஐக்கிய நாடுகள் டிசம்பர் 21 ந் தேதியை உலக தியான தினமாக அனுசரிக்க கோரி இந்தியா சார்பில் ஐக்கிய நாடுகள் பொது சபையில் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. இதை யொட்டி கடந்த 2024 ம் ஆண்டு முதல் உலகமெங்கும் உலக தியான தினம் கொண்டாடப்பட்டது. இதை தொடர்ந்து இந்த ஆண்டு ஈரோடு மனவளக்கலை மற்றும் அறக்கட்டளை சார்பில் கடந்த 21 ம் தேதி சிறப்பு தியான நிகழ்வு ஈரோடு அறிவு திருக்கோயிலில் நடந்தது.
வேதாத்திரி பதிப்பக இயக்குனர் சதாசிவம் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் துரியோதீத தவம் என்ற பெயரில் தியானம் நடந்தது. இதில் மணமளக்கலை உறுப்பினர்கள் சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு நேரம் தியானம் செய்தனர். உலகம் பெற வேண்டி இந்த தியானம் நடைபெற்றது.

# தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட மை பாரத் சார்பில் விளையாட்டுப் போட்டிகள் !



தருமபுரி, டிசம்பர். 23–
தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட அலுவலகங்கள் சார்பில் வருங்கால இளைய தலைவர்களின் முகாம் நிகழ்ச்சியை டிசம்பர் 16 முதல் 18 வரை மூன்று நாட்கள் நடத்தப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த 35 இளைஞர்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த 35 இளைஞர்களும் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்ச்சியின் துவக்க விழாவில் ஒகேனக்கல் தமிழ்நாடு ஓட்டலின் மேலாளர் ஆனந்த, அங்காளம்மன் பாரமெடிக்கள் கல்லூரியின் இயக்குனர் சிலம்பரசன், முதல்வர் துரை, ஹார்ட்புல்னஸ் அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நிதிலகுமார் மற்றும் ரகுநாத், ஸ்ரீனிவாசன் மற்றும் மை பாரத் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியின் துணை இயக்குனர் ட்ரவீன் சார்லஸ்டன் ஆகியோர் கலந்து கொண்டு இளைஞர்களை ஊக்குவித்தனர்.
இந்த நிகழ்ச்சியில் இளைஞர்களுக்கு தேவையான ஆளுமை திறன், தகவல் தொடர்பு திறன், தலைமை பண்பு , நிதி நிர்வாகிக்கும் திறன், தொழில் நெறி வழிகாட்டுதல், இளையோர் பாராளுமன்றம் போன்ற பயிற்சிகளும் மற்றும் பேச்சு போட்டியும் நடத்தப்பட்டு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இதன் மூலம் இளைஞர்களை வருங்கால தலைவர்களாக உருவாக்குவதற்கு இந்த நிகழ்ச்சி வித்திடும்.

# தூத்துக்குடியில் ‘சட்டங்கள் ஆயிரம்’ திரைப்பட பாடல் வெளியீட்டு விழா !



தூத்துக்குடி, டிச.23–
சட்டங்கள் ஆயிரம்' திரைப்படம் வருகிற பிப்ரவரி மாதம் தமிழ்நாடு முழுவதும் வெளியிடப்பட இருக்கிறது. இந்நிலையில், இந்தத் திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா இயக்குனர் பிராட்வே சுந்தர் தலைமையில் தூத்துக்குடி சத்யா திரையரங்கில் நடைபெற்றது. தியேட்டர் உரிமையாளர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.
இந்நிகழ்ச்சியில் திரைப்பட தயாரிப்பாளர் செல்வம், கதாநாயகி கதிரேஸ்வரி, நடிகர்கள் ராஜ்கபூர், கதிரேஷ், சிவசு, ராஜேந்திரபூபதி, கணேஷ் குமார், ராஜா கதிரவன், வேல்குமார், பரணி பாலா, குமரேசன், வரதன், நடிகைகள் கார்த்திகா, சுசீலா, பாக்யா சாம், தங்கேஸ்வரி, இணை இயக்குனர் விஷ்ணு மகேஷ் உள்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர். முன்னதாக திரைப்பட பாடல் ஆசிரியரான கவிஞர் நீதி செல்வன் வரவேற்று பேசினார்.

# நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம்



கோவை, டிச.23-
கோவை மாவட்டம் சிங்காநல்லூர் கிருஷ்ணாபுரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்.
இதில் கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது. இதில் பல்வேறு துறைகள் இடம் பெற்றன சிறப்பு பரிசோதனைகளாக இரத்த பரிசோதனை, ஸ்கேன்,எக்ஸ்ரே புற்றுநோய் பரிசோதனை, இசிஜி/Eco போன்ற சிகிச்சைகள் இடம் பெற்றன,முகாமில் பாராளுமன்ற உறுப்பினர்,மாநகராட்சி மேயர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் துணை மேயர் கலந்து கொண்டனர்.பொதுமக்கள் தங்களுக்கு தேவையான சேவையை பயன்படுத்திக் கொண்டனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# ஊத்தங்கரையில் தமிழக வெற்றிக்கழக சார்பில் மக்கள் இணைப்பு பெருவிழா



ஊத்தங்கரை, டிச.23-
கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சி சாலை பகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதி மக்களின் மக்கள் இணைப்பு பெருவிழா நடைபெற்றது.
இந்த விழாவில் லீடர் கார்த்தி தலைமையில் அம்ஜத் கான் முன்னிலையில் நடைபெற்றது விழாவில் சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலாளர் முரளி விஜய் இணை செயலாளர் தாமோதரன் மாவட்ட பொருளாளர் மணிகண்டன் செயற்குழு உறுப்பினர் சிங்காரவேலன் சுகுமார் மற்றும் கழகத் தொண்டர்கள் பார்த்திபன் அருண்குமார் ரிஸ்வான் மனோஜ் குமார் தமிழக வெற்றி கழக தொண்டர்கள் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மக்கள் இணைப்பு பெருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்வில் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து பல்வேறு மாற்று கட்சியிலிருந்து விலகி 500-க்கும் மேற்பட்ட தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர் இதில் பெரும்பாலானோர் மகளிர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

# புவனேஸ்வர் எக்ஸ்பிரஸ் ரயில் கடத்தி வரப்பட்ட 10 கிலோ கஞ்சா பறிமுதல்



இராமேஸ்வரம், டிச.23-
ராமேஸ்வரம் ரயில் நிலையத்திற்கு அதிகாலை வந்தடைந்த புவனேஸ்வர் விரைவு ரயில் வண்டியை ரயில்வே இருப்பு பாதை காவல் நிலைய போலீசார் சோதனை மேற்கொண்ட போது பதிவு இல்லாத பெட்டியில் 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு தீவிர விசாரணை.
ரயில்வே இயக்குனர் வன்னிய பெருமாள் கிடைத்த ரகசிய தகவலையடுத்து திருச்சி ரயில்வே மாவட்ட கண்காணிப்பாளர் ராஜன் உத்தரவின் பேரில்
இராமேஸ்வரம் இருப்பு பாதை காவல் நிலையம் சார்பு ஆய்வாளர் விக்னேஸ்வரன் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் அன்புச்செல்வன் ஆகியோர் தலைமையில்
புவனேஸ்வர் ரயில் நிலையத்திலிருந்து ராமேஸ்வரம் ரயில் நிலையத்திற்கு வந்தடைந்த புவனேஸ்வர் விரைவு ரயில் வண்டியின் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் கருப்பு கலர் பேக்கை சோதனை செய்து பார்த்ததில் அதில் சுமார் 10 கிலோ எடை கொண்ட 05 கஞ்சா பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டனர் இது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் ராணுவ வீரர் எஸ். எம்.கிருஷ்ணன் 25 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி !



கோவில்பட்டி , டிச.23-
கோவில்பட்டி யூனியன், ஊத்துப்பட்டி கிராமத்தில், முன்னாள் இந்திய ராணுவ வீரர் எஸ். எம்.கிருஷ்ணன் அவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி வீரவணக்கம் நாள், ஊத்துப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூண் அமைவிடத்தில் அனுசரிக்கப்பட்டது, அதனைத் தொடர்ந்து ஊர் பொதுமக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, இந்நிகழ்வில் திமுக சார்பில் மாவட்ட கவுன்சிலர் பிரியா குரு ராஜ் கலந்துகொண்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார், இந்நிகழ்வில் கோவில்பட்டி திமுக மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார், தூத்துக்குடி வடக்கு மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் திரு .முருகன் முன்னிலை வகித்தார், ஒன்றிய கவுன்சிலர் தாமோதர கண்ணன், மந்தித்தோப்பு பஞ்சாயத்து தலைவர் மணி, ஊத்துப்பட்டி திமுக கிளைக் கழகச் செயலாளர் மாரீஸ்வரன், கயத்தாறு சூர்யா, பால்ராஜ், உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர், ஊர் பொதுமக்கள் மற்றும் ராணுவ வீரரின் குடும்பத்தார்கள் அனைவரும் சிறப்பான முறையில் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்து வரவேற்றார்கள்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# பெப்ஸ்-ன் புதிய 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்' குன்றத்தூரில் திறப்பு விழா



சென்னை, டிச.23-
இந்தியாவின் முன்னணி ஸ்பிரிங் மெத்தை மற்றும் தூக்கத் தீர்வுகள் நிறுவனமான பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ், குன்றத்தூரில் புதிய 'பெப்ஸ் கிரேட் ஸ்லீப் ஸ்டோர்' விற்பனை மையம் திறப்பு விழா நடைபெற்றது.
இந்த புதிய விற்பனை நிலையமானது, மாநகரில் ஏற்கனவே உள்ள பெப்ஸ் கிளைகளுடன் இணைந்து செயல்படும். வளர்ந்து வரும் சென்னையின் புறநகர் பகுதிகளில் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கும், தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட பிரீமியம் தூக்கத் தீர்வுகளை உறுதி செய்யும் தனது தயாரிப்புகள் எளிதில் கிடைக்குமாறு வழங்க வேண்டும் என்ற இந்நிறுவனத்தின் நோக்கத்தை இது பிரதிபலிக்கிறது.
இந்த புதிய விற்பனை மையத்தை பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் விற்பனைப் பிரிவு பொது மேலாளர் எஸ்.ராஜேஷ் மற்றும் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு திறந்து வைத்தனர்.
இந்நிகழ்வில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசியதாவது:-
சென்னையில் பெப்ஸ் நிறுவனத்தின் தொடர் வளர்ச்சியைப் பாராட்டியதோடு, புதிய விற்பனையகத்தின் வெற்றிக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.
நவீன வசதிகளுடன் ஒரு அனுபவ மையம் என்ற வடிவமைப்புடன் குன்றத்தூரில் நிறுவப்பட்டுள்ள 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்', பெப்ஸ் நிறுவனத்தின் அனைத்து வகையான மெத்தைகள் (ஸ்பிரிங், ஃபோம் மற்றும் கயிறு), தலையணைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் உதிரிபாகங்களை ஒரே இடத்தில் பார்வையிட வாடிக்கையாளர்களுக்கு, சிறந்த தளத்தை வழங்குகிறது. வாடிக்கையாளர்கள், பெப்ஸ்-ன் தயாரிப்புகளான மெத்தைகள் மற்றும் தலையணைகளின் தன்மைகளை நேரடியாக உணர்ந்து, ஒப்பிட்டுப் பார்த்து, தங்கள் உடல்நலம் மற்றும் தூக்கத் தேவைகளுக்கேற்ப சரியான தயாரிப்பை தேர்ந்தெடுக்க இங்கு வழி காட்டப்படுகிறது என்றார்.
மேலும் பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் விற்பனைப் பிரிவு பொது மேலாளர் எஸ்.ராஜேஷ் கூறியதாவது: "சென்னை எப்போதும் எங்களுக்கு மிக முக்கியமான மற்றும் நம்பிக்கையான சந்தையாக திகழ்கிறது. இங்குத் தரமான மற்றும் பிரீமியம் தூக்கத் தீர்வுகளுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குன்றத்தூரில் அமைந்துள்ள இந்த புதிய 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்' வாடிக்கையாளர்களுக்கு நேர்த்தியான சேவையை வழங்கும்.
இந்தியா முழுவதும் 5,000-க்கும் மேற்பட்ட மல்டி-பிராண்ட் விற்பனை நிலையங்கள் மற்றும் 92 பிரத்யேக 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்'களுடன் செயல்பட்டு வரும் பெப்ஸ், தமிழ்நாட்டை மிக முக்கிய வளர்ச்சிச் சந்தையாகக் கருதி தனது சில்லறை வர்த்தக விரிவாக்கப் பணிகளைத் துரிதப்படுத்தி வருகிறது என்றார்.



ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் காபி வித் கலெக்டர் நிகழ்ச்சி நடந்தது .இதில் இரண்டு பெற்றோர்கள் மற்றும் இருவரில் ஒருவரை இழந்து நிதி உதவி பெறும் குழந்தைகளுடன் ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி கலந்துரையாடினார் . கலெக்டரை நேரில் சந்தித்து உரையாடியதால் குழந்தைகள் மகிழ்ச்சி அடைந்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் நல மாவட்ட அலுவலர் உமா மகேஸ்வரி நூல் ஆசிரியர் சரிதா ஜோ ஆகியோர் கலந்து கொண்டனர் .

# பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் 41 வது ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு !



கோவை, டிச. 23-
கோவை மாவட்டம் அன்னூர் வட்டம் வையம்பாளையம் கிராமத்தில் உழவர் பெருந்தலைவர் சி.நாராயணசாமி நாயுடுவின் 41 வது ஆண்டு நினைவு நாள் அவரது மணிமண்டபத்தில் அனுசரிக்கப்பட்டது.சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு.ஸி.வேலுசாமி தலைமையில் மலர்வளையம் வைத்து மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.பிறகு கூறியதாவது
தமிழ்நாடு அரசு விவசாயிகளிடமிருந்து பால் கொள்முதல் ஆவின் நிறுவனம் மூலம் செய்து வருகிறது பசும்பால் மற்றும் எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு கொள்முதல் விலையிலிருந்து தற்போது வெளியில் இருந்து 15 ரூபாய் கட்டுப்படியாகவில்லை என்று உயர்த்தி வழங்ககோரி உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அரசுக்கு பலமுறை கோரிக்கை வைத்தது.
இதுவரையிலும் தமிழ்நாடு அரசு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பால் கொள்முதல் விலையை 15 ரூபாய் உயர்த்தி வழங்கப்படவில்லை ஆகவே தமிழ்நாடு அரசுக்கு உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழ்நாடு விவசாய சங்கத்தை பொறுத்த அளவிற்கு அனைத்து விவசாய சங்கங்களையும் கூட்டமைப்பை கூட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது கடந்த மாதம் கடந்த மாதத்திற்கு முன்பு கடும் மழையின் காரணமாக போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.
மீண்டும் இந்தப் போராட்டம் வருகின்ற 29ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக தேசிய நெடுஞ்சாலையில் கால்நடைகளுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்தார்.உடன் மாநில பொருளார் மோகன் குமார்,மாநில துணைத் தலைவர் ராஜாபெருமாள், திருப்பத்தூர் கணதி,சேலம் மாவட்ட தலைவர் ஏழுமலை மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகளும் உடன் இருந்தனர்.

# அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச பேக் வழங்கும் விழா



சென்னை அம்பத்தூரை அடுத்த அரிக்கம்பேட்டில் பல்வேறு அரசு பள்ளி மாணவர்களுக்கு பெங்களூருவைச் சேர்ந்த அனிதா மேரி சார்பாக மாணவர்களுக்கு 16 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பேக்குகள் வெள்ளனூர் முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் அ.பிரபாகரன், சமூக ஆர்வலர் அறவாழி,ஸ்ரீதர், ஜெயராமன் முன்னிலையில் வழங்கப்பட்டது.

# ஸ்ரீ தர்மசாஸ்தா பூஜா கமிட்டி சார்பாக 21 ஆம் ஆண்டு விழா



கோவை, டிச:23-
கோவை சிங்காநல்லூர் பகுதியில சிங்காநல்லூர் மணிகண்டன் ஸ்ரீ தர்ம சாஸ்தா பூஜா கமிட்டி சார்பாக 21 ம் ஆண்டு விழா நடைபெற்றது. இதில் கேரளா புகழ் பெற்ற கலை நிகழ்ச்சிகலான பஞ்சவர்த்தியம், சிங்காரி மேளம், தைய்யம்,டோல் டான்ஸ்,சிந்து காவடி ,பூக்காவடி போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.பிரம்மஸ்ரீ தந்திர ரத்னம் ஜெயராமன் நம்பூதிரி குத்துவிளக்கேற்றி அன்னதானத்தை துவக்கி வைத்தார்.

# தருமபுரியில் மகாத்மா காந்தி பெயரை நீக்கியதை கண்டித்து காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




தருமபுரி , டிசம்பர். 23-
தருமபுரியில் மகாத்மா காந்தி ஊரக 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் பெயரை மாற்றிய ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து தருமபுரி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் பி. தீர்த்தராமன் தலைமையில் பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் 100 - க்கும் மேற்பட்டோர் பங்கேற்று மத்திய பா.ஜ.க அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பி ஆர்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்பாட்டத்தில் மகிளா காங்கிரஸ் மாநில துணை தலைவி ஞ்ஸி . காளியம்மாள், வழக்கறிஞ்ஞர் மோகன், பொது குழு உறுப்பினர்கள் ஜெயசங்கர், நரேந்திரன், நகர தலைவர் வேடி, வெற்றிவேந்தன், முபாரக், சன்முகம் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# விளாத்திகுளத்தில் யோகீஸ்வரர் சமுதாய குடும்ப விழா



விளாத்திகுளம், டிசம்பர். 23-.
தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டார யோகீஸ்வரர் சமுதாய மக்கள் நலச்சங்கத்தின் சார்பில், விளாத்திகுளத்தில் உள்ள தனியார் திருமண மஹாலில் மாபெரும் குடும்ப விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதை முன்னிட்டு விளாத்திகுளம் பேருந்து நிலையத்திலிருந்து யோகீஸ்வரர் சமுதாய மக்கள் சுமார் 300க்கும் மேற்பட்டோர் செண்டை மேளம் முழங்க,பள்ளி மாணவர்களின் சிலம்பாட்டம் நடனத்துடன் ஊர்வலமாக திருமண மஹாலிற்கு சென்று குடும்ப விழாவில் பங்கேற்றனர். இவ்விழாவிற்கு விளாத்திகுளம் வட்டார யோகீஸ்வரர் சமுதாய மக்கள் நலச்சங்கத்தின் தலைவர் கணேசன் மற்றும் கிளைத்தலைவர் அரிகிருஷ்ணன் தலைமை வகித்தனர். பின் இவ்விழாவில் சமுதாய சங்க நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு, நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன. இதைத்தொடர்ந்து இதில் சிறப்புரையாற்றிய நிர்வாகிகள், பள்ளி, கல்லூரிகளில் பயின்று வரும் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ - மாணவிகள் நன்முறையில் அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்று அறிவுரைகள் கூறி, மாணவர்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கினர். மேலும் இந்நிகழ்ச்சியில் யோகீஸ்வரர் சமுதாய நலச்சங்கத்தின் சார்பில் 2026-ம் ஆண்டிற்கான காலண்டரை சமுதாய மக்கள் அனைவருக்கும் வழங்கி சிறப்பித்தனர். இறுதியாக விழாவில் நடைபெற்ற அறுசுவை அன்னதானத்தில் சமுதாய மக்கள் அனைவரும் கலந்து கொண்டு உணவருந்திச்சென்றனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு யோகேஸ்வரர் மாநில சமுதாய பேரவைத் தலைவர் இராஜகோபால், மாநில செயல் தலைவர் இராஜமுருகன், மாநில பொதுச் செயலாளர் நிர்வாக செயலாளர் சுப்ரமணியன், மாநில பொருளாளர் சுரேஷ், மாநில சட்ட ஆலோசகர் பிச்சாண்டி, விளாத்திகுளம் கௌரவ ஆலோசகர் கணேசன், கிளைச்செயலாளர் செல்வம், சிறப்பு அழைப்பாளர்களாக சண்முகையா (அ.இ.வானொலி- நாகர்கோவில்), ஆந்திர மாநிலத் தலைவர் ராஜேந்திரன், மதுரை மாவட்ட தலைவர் கண்ணன், விளாத்திகுளம் துணைத் தலைவர் உமையராஜ், பொருளாளர் அய்யம்பெருமாள் உள்ளிட்ட ஏராளமான சங்க நிர்வாகிகள், இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி சேர்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விளாத்திகுளம் கிளை இளைஞர் அணி தலைவர் கரண் மற்றும் செயலாளர் செண்பகராஜ் செய்திருந்தனர்.

# கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம் சார்பில் 23 வது மாவட்ட பொதுக்குழு கூட்டம்!




கிருஷ்ணகிரி , டிச.23-
தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், கிருஷ்ணகிரி மாவட்ட கிளையின் 23வது மாவட்ட பொதுக்குழு கூட்டம், மற்றும் 2026 ஆம் ஆண்டு மாத நாட்காட்டி வழங்குதல், மற்றும் ஓய்வு பெற்ற ஓட்டுநர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, மாவட்ட வருவாய் துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் மற்றும் மாநில பொருளாளர் பை.முருகன் தலைமை தாங்கினார். மாநில ஒழுங்கு நடவடிக்கை குழு தலைவர் பெ.ஆண்டி முன்னிலை வகித்தார்.

மாவட்டச் செயலாளர் கே.டி.செந்தில் குமார் தீர்மானம் வாசித்தார். அந்தத் தீர்மானத்தில், 31.5.2009க்கு பின் தேர்வு நிலை, சிறப்பு நிலை, முதுநிலை, ஓட்டுநர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாட்டை போக்கிட வேண்டும் எனவும், பங்களிப்புடன் கூடிய புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வு செய்து திட்டத்தை அமல்படுத்திட வேண்டும் எனவும், அரசுத் துறையில் ஏற்பட்டுள்ள ஓட்டுனர் காலிப் பணியிடங்கள் அனைத்தையும் அரசு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரந்தர ஓட்டுநர்களாக நிரப்பிட வேண்டும் எனவும், ஏற்கனவே பணி புரியும் பணியிடங்களில் ஓட்டுநர்களின் தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர ஓட்டுநர்களாக பணி அமர்ந்திட வேண்டும் எனவும், தகுதியும் விருப்பமும் உள்ள ஓட்டுநர்களுக்கு இளநிலை உதவியாளராக பணி மாறுதல் வழங்கிட அரசாணை பிறப்பிக்க வேண்டும் உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கை வலியுறுத்தி தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக ஊரக வளர்ச்சித்துறையை சேர்ந்த யுவராஜ், சேகர், சுகாதாரத்துறையை சேர்ந்த வீரமணி, வெங்கடாசலம் நஞ்சாரெட்டி, வருவாய்த்துறை சிவக்குமார் ஆகிய ஓய்வு பெற்ற ஓட்டுநர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கி கௌரவப்படுத்தினார்கள். இந்த சிறப்பான கூட்டத்திற்கு மாநிலத் துணைத் தலைவரும் மயிலாடுதுறை மாவட்ட தலைவருமான அன்பழகன், சிவகங்கை மாவட்ட தலைவர் லட்சுமணபெருமாள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட பொருளாளர் து.ரமேஷ்பாபு நன்றி உரையாற்றினார்.




# மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி யூனியன் பகுதிகளில் சேதமடைந்த இணைப்பு சாலைகள் எப்போது சரி செய்யப்படும்?



மதுரை. டிச.22-
மதுரை மாவட்டம் மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி யூனியன்களுக்கு உட்பட்ட கிராமங்களில் நீண்ட காலமாக சேதமடைந்து காணப்படும் முக்கிய இணைப்பு சாலைகள் சீரமைக்கப்படாததால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே புதிய தார்சாலைகள் அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் (உதாரணத்திற்கு மேலூர் யூனியன் வெள்ளலூர் முதல் பழயூர்பட்டி செல்லும் இணைப்புச்சாலை) இணைப்பு சாலைகள் சேதமடைந்து பல வருடங்களை கடந்த நிலையில் இன்னும் செப்பனிடப்படாமல், புதிய தார்சாலைகள் அமைக்கப்படாமல் இருந்து வருகிறது.

சாலைகள் மோசமாக இருப்பதால் அத்தியாவசியப் பொருட்கள் வாங்கவோ அல்லது அருகில் உள்ள பெரிய கிராமங்களுக்கு செல்லவோ பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். மேலும் மேடு, பள்ளங்களாக காணப்படுவதால் இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் மெதுவாகச் செல்வதோடு அடிக்கடி விபத்துக்கள் விபத்துகளும் ஏற்படுகின்றன. இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு தினசரி வேலைகளுக்குச் செல்பவர்கள், மாணவர்கள், அலுவலகங்களுக்கு பணிக்கு செல்வோர் மற்றும், வியாபாரிகள் என அனைத்துத் தரப்பினரும் பாதிப்படைந்து மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே, போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் ஏற்படும் கடும் அவதிகள், சிரமங்களை கருத்தில் கொண்டு பாதிப்படைந்த இணைப்புச் சாலைகளில் புதிய தார் சாலைகள் அமைக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட ஆட்சியர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராமப் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தருமபுரியில் புதிய நகர பேருந்து சேவைகளை ஆட்சியர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் துவக்கி வைத்தனர்



தருமபுரி, டிசம்பர். 23–
தருமபுரி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தின் சார்பில் பழைய வழித்தடங்களில் பழைய பேருந்துகளுக்கு பதிலாக 7 புதிய நகர பேருந்துகள் சேவையை மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ் .பி. வெங்கடேஸ்வரன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் தருமபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, நகர பொறுப்பாளர்கள் நாட்டான் மாது, கௌதம், ஒன்றிய செயலாளர் காவேரி, நகரத் துணைச் செயலாளர் வ. முல்லைவேந்தன், தலைமை கழக பேச்சாளர் டி .ஏ .ரவி, மே. அன்பழகன், கனகராஜ், சுருளி ராஜன், எ. மாதேஸ்வரன், வெல்டிங் ராஜா, மாவட்ட கலை இலக்கிய அணி தலைவர் டி. எ. குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அசோக் குமார் கோவிந்தன் மற்றும் தமிழ்நாடு போக்குவரத்து துறை பொது மேலாளர் (சேலம்) மோகன் குமார், அலுவலர்கள், ஊழியர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரையில் தமிழக வெற்றிக்கழக சார்பில் மக்கள் இணைப்பு பெருவிழா



ஊத்தங்கரை, டிசம்பர். 23–
கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சி சாலை பகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதி மக்களின் மக்கள் இணைப்பு பெருவிழா நடைபெற்றது இந்த விழாவில் லீடர் கார்த்தி தலைமையில் அம்ஜத் கான் முன்னிலையில் நடைபெற்றது விழாவில் சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலாளர் முரளி விஜய் இணை செயலாளர் தாமோதரன் மாவட்ட பொருளாளர் மணிகண்டன் செயற்குழு உறுப்பினர் சிங்காரவேலன் சுகுமார் மற்றும் கழகத் தொண்டர்கள் பார்த்திபன் அருண்குமார் ரிஸ்வான் மனோஜ் குமார் தமிழக வெற்றி கழக தொண்டர்கள் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மக்கள் இணைப்பு பெருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்வில் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து பல்வேறு மாற்று கட்சியிலிருந்து விலகி 500–க்கும் மேற்பட்ட தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர் இதில் பெரும்பாலானோர் மகளிர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது

# ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் பயனாளர்களுக்கான சிறப்பு பிரிவிலேஜ் கார்டு அறிமுகம்!




சென்னை, டிச. 23-
வாசன் கண் மருத்துவமனை - ஏ.எஸ்.ஜி கண் மருந்துவமனை மற்றும் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் ஆகியவை இணைந்து கண்நோய்களு நாடு முழுவதும் கேஷ்லெஸ் சிகிச்சைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

வாசன் மற்றும் ஏ.எஸ்.ஜி கண் மருத்துவமனைகளுக்கு இந்தியா முழுவதும் 170 கிளைகள் உள்ளன. 650 சிறந்த மருத்துவர்கள் நோயாளிகளுக்கு தரமான கண் பராமரிப்பை வழங்கி வருகின்றனர் . இதுவரை 5 கோடி மக்கள் இவர்களின் சேவைகளைப் பெற்றுள்ளனர். இதில் கண்புரை பார்வை பிழை , குளோக்கோமா சுருங்கிய கண் சிகிச்சை ரெட்டினா, கண் புற்றுநோய், குழந்தைகள் கண் பராமரிப்பு, நீரிழிவு ரெட்டினோபதி, கார்னியா, வைட்ரெக்டமி. ஆப்டிக்கல், கான்டாக்ட் லென்ஸ் ஆகியவை அடங்கும்.

நாடு முழுவதும் ஒப்பந்தத்தின் அடிப்படையில், சென்னை பிராந்திய வாசன் கண் மருத்துவமனை ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் முகவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு எழும்பூர் இந்திய செஞ்சிலுவை சங்க வளாகத்தில் மிகப்பெரிய கண் பரிசோதனை முகாமை நடத்தியது.

சென்னை பிராந்திய மருத்துவ இயக்குநர் டாக்டர் கவுஷிக், வட பழனி சி.எம்.ஓ ஷெர்ரென் ஸ்டார் ஹெல்த் பிஸினஸ் ஹெட் பாலாஜி பாபு, மண்டல மேலாளர் சையத் இம்ரான், உதவி மண்டல மேலாளர் அருளேசன், ஆகியோர் நிகழ்ச்சியை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் பயனாளர்களுக்கான சிறப்பு பிரிவிலேஜ் கார்டை அறிமுகம் செய்தனர்.



திருவாடானை சட்டமன்ற தொகுதியின் வேட்பாளராக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக எதிர்வரும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிட இராமநாதபுரம் மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் கவிஞர் ராமநாதன் அதிமுக தலைமை அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா மற்றும் முன்னாள் அமைச்சர் செம்மலை ஆகியோரிடம் விருப்ப மனு வழங்கினார்.

# திருவண்ணாமலையில் திடீர் வாகன சோதனை : விதிமீறலில் ஈடுபட்ட 16 வாகனங்களுக்கு ரூ.1.78 லட்சம் அபராதம் விதிப்பு



திருவண்ணாமலை டிச.23-
திருவண்ணாமலையில் வட்டார போக்குவரத்து அலுவலர் கருணாநிதி திடீர் வாகன சோதனையில் ஈடுபட்டார். அப்போது விதிமீறலில் ஈடுபட்ட 16 வாகனங்களுக்கு ரூ.1.78 லட்சம் அபராதம் விதித்தார்.

திருவண்ணாமலைக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரத்துள்ளது. அதனால் ஆட்டோக்களை இயக்க வட்டார போக்குவரத்து துறை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன்படி திருவண்ணாமலையில் பதிவு செய்யப்பட்ட உரிய ஆவணங்களை முழுமையாக வைத்திருக்கும் ஆட்டோக்களுக்கு மட்டும் க்யூஆர் கோடு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சுமார் 3500 ஆட்டோக்களுக்கு இதுவரை க்யூஆர் கோடு வழங்கப்பட்டுள்ளது.

ஆட்டோக்களில் ஒட்டப்பட்டுள்ள க்யூ ஆர் கோடு ஸ்கேன் செய்தால் ஆட்டோ குறித்த விவரங்களையும் பயணம் செய்வோர் தெரிந்துகொள்ளலாம். அதன் மூலம் ஆட்டோக்களில் பயணம் செய்பவர்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன் விதிமீறல் தொடர்பான புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதும் எளிதாகியுள்ளது. இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் உத்தரவின்பேரில் திருவண்ணாமலையில் வட்டார போக்குவரத்து அலுவலர் கருணாநிதி தலைமையில் திடீர் வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மத்திய பேருந்து நிலையம் அண்ணா நுழைவுவாயில் பெரியார் சிலை சந்திப்பு உள்பட மாநகரின் பல்வேறு பகுதிகளில் நடந்த வாகன சோதனையில் உரிய ஆவணங்கள் இல்லாதது க்யூ ஆர் கோடு இல்லாமல் இயக்கியது உள்ளிட்ட விதிமீறல்கள் தொடர்பாக 4 ஆட்டோக்கள் 4 மினிவேன் 22 லாரி உள்பட 16 வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதோடு ரூ.1.78 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து வாகன சோதனைகள் நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக வட்டார போக்குவரத்து அலுவலர் கருணாநிதி தெரிவித்த அவர் குறிப்பாக கிரிவல பாதையில் அதிவேகத்தில் செல்லும் வாகனங்களை கட்டுப்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# அதிமுக கூட்டணியில் விஜய் தமிழருவி மணியன் அழைப்பு



ஈரோடு, டிச. 23-
தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் தமிழ ருவி மணியன் தலைமையி லான காமராஜர் மக்கள் கட்சி இணையும் விழா ஈரோட்டில் நடந்தது ஈரோடு மாநகர மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் நடந்த இந்த விழாவில் தாங்கினார். முன்னாள் எம் எல் ஏ விடியல் சேகர் மாநில பொது செயலாளர் யுவராஜா பொது குழு உறுப்பினர் சந்திர சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழா வில் த.மா.கா. தலைவர் ஜி. கே.வாசன் எம்.பி. கலந்து கொண்டு தமிழருவி மணியனுக்கு வேல் வழங்கி தனது கட்சியில் இணைத்துக் கொண்டார். இதைத்தொ டர்ந்து த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் கட்சியில் இணைந்தவர்களை வரவேற்று பேசினார். இதன் பிறகு தமிழருவி மணி யன் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது கூறுகையில், அரசியல் எதிரி தி.மு.க.வை வீழ்த்த த.வெ.க. தலைவர் விஜய் வலிமையான கூட்ட ணியில் இடம்பெற வேண் டும். 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் விஜய் கூட் டணி முடிவை எடுக்காவிட் டால் நிச்சயமாக பரிதாப மான தோல்வியை சந்திப்பார் என்றார்.

# சிவகங்கை அருகே பட்டா வேண்டி ஆதிதிராவிட மக்கள் கோரிக்கை



சிவகங்கை, டிச.23–
சிவகங்கை வட்டம் அரசனி முத்துப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கிராமம் நெம்மேனி
ஆதிதிராவிடர் சமூக மக்கள் வசிக்கும் பகுதியான இந்த நெம்மேனி கிராமத்தில் சுமார் 16க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பட்டா வேண்டி தொடர்ந்து பல கோரிக்கை மனுக்களை அளித்து வந்த நிலையில் மீண்டும் மாவட்ட ஆட்சியரின் குறைதீர்ப்பு கூட்டத்தில் மனுக் கொடுத்தனர்.
இதுகுறித்து நம்மிடம் பேசிய சமூக ஆர்வலர் டெய்லர் ஆறுமுகம் என்பவர் எங்கள் பகுதி முழுக்க முழுக்க பட்டியல் இனத்தவர் வசிக்கும் பகுதியாகும், மேலும் மாவட்ட தலைநகருக்கு அருகாமையில் இருக்கும் எங்கள் ஊருக்கு இந்த நிலைமைதான் எனவும் , பல்வேறு காலகட்டத்தில் மனுக்களை கொடுத்து கொடுத்து எந்த தீர்வுமே கிடைக்க வில்லை எனவும் இது தொடரும் பட்சத்தில் எங்களது சமூக மக்களை ஒன்று திரட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்த இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.



வேலூர் மாவட்ட தச்சு தொழிலாளர் நல சங்கம் சார்பில் காட்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட தச்சு தொழிலாளர்கள் அரசு பள்ளி மாணவிகளுக்காக தங்களின் "ஒரு நாள் உழைப்பை தானமாக" வழங்கியதற்கு அச்சங்கத்தின் அகில இந்திய கட்டுமான தொழிற்சங்க மாநில தலைவர் பாலகணேஷ் தச்சு தொழிலாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவப்படுத்தினார் இதில் மாநிலத் துணைத் தலைவர் எம்.தங்கராஜ் கிழக்கு பகுதி ஒன்றிய செயலாளர் வேல்முருகன் உட்பட மற்றும் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை கவுண்டம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிய வகுப்பறைகளை தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்!



கோவை, டிச.23–
கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 29 வார்டில் நபார்டு திட்டத்தில் ரூ 325.60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளை தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்ததை தொடர்ந்து கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். மேற்கு மண்டல தலைவர் தெய்வானை 33 வது வார்டு கவுன்சிலர் கிருஷ்ணமூர்த்தி, தலைமை தாங்கினார். பள்ளியின் தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரி, அனைவரையும் வரவேற்றார். திமுக கவுண்டம்பாளையம் பகுதி செயலாளர் சரத் விக்னேஷ், 33 வது வட்ட செயலாளர் தன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர், திமுக முன்னாள் மாவட்ட அமைப்பாளர் சண்முகம், மாவட்டத் துணை அமைப்பாளர் செந்தில் மூர்த்தி, மாவட்ட பிரதிநிதி லோகநாதன், மாவட்ட பகுதி நிர்வாகிகள் செல்வி மிசா தேவராஜ் ஞானசேகர் சங்கர் ஜெயச்சந்திரன் மகேந்திரன் இம்ரான் விஜயந்திரன் திமுக இளைஞரணி ராகுல் உடன் இருந்தனர்.இதில் பள்ளி ஆசிரியர்கள் மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் அதிமுகவின் தமிழகத்தை காப்போம் மக்களை மீட்போம் எழுச்சி மாநாட்டு திடலில் முகூர்த்தக்கால் நடும் பணி



சேலம், டிசம்பர். 23–
சேலத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கலந்து கொள்ளும் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் எழுச்சி மாநாடு பனமரத்துப்பட்டி ஒன்றியம் கெஜ்ஜல் நாயக்கன்பட்டியில் நடைபெறுவதை முன்னிட்டு விழா நடைபெறும் இடத்தில் அதிமுக புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன் தலைமையில் முகூர்த்த கால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.
இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜமுத்து, பாலசுப்பிரமணியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செம்மலை, மற்றும் ஜெய்சங்கர், நல்லதம்பி ஜெகநாதன், பாலச்சந்தர் ஆகியோர் உட்பட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பில்லூர் கண்மாயை ஆக்கிரமித்த தனிநபர் மீட்டு தர கோரி மாவட்ட ஆட்சியரிடம் கிராம மக்கள் மனு



சிவகங்கை, டிச. 23-
சிவகங்கை மாவட்டம் பில்லூர் கிராமத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். பில்லூர் கண்மாய் நீர்ப்பிடிப்புப்பகுதியான அழகப்பா ஊரணியை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதைக் கண்டித்து, உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி ஊர் முக்கியஸ்தர்கள் வழக்கறிஞர் பில்லூர் கார்த்திகேயன் , முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கே. பி. இராமசாமி , முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் முருகன் தலைமையில் சுமார் 50க்கும் மேற்பட்ட கிராமப் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.
இதனிடையே பேசிய கிராம முக்கியஸ்தர்கள் கூறும்போது நாங்கள் ஏற்கனவே பலமுறை மனுக்களை இதே மாவட்ட ஆட்சியரிடத்திலும் , வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் மற்றும் வருவாய் கோட்டாட்சியரிடத்திலும் கொடுத்துவிட்டோம் இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.
இந்த மனுவிற்கும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஊர் பொதுமக்களை ஒன்றுதிரட்டி பெரியளவில் போராட்டம் நடத்துவோம் எனவும் தெரிவித்தனர்.




# கோவில் மின்சாரம் துண்டிப்பு பொதுமக்கள் சாலை மறியல்!



திருப்பூர், டிச.23–
பெருமாநல்லூர் சாலையில் கோயிலில் மின் இணைப்பை துண்டித்ததை கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல் நடத்தினர்.
திருப்பூர் பெருமாநல்லூர் சாலை போயம்பாளையம் பகுதியில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த போடி முத்தையா ஜக்கம்மாள் கோயில் உள்ளது. இந்தக் கோயிலின் மின் இணைப்பை தனிநபர் அளித்த புகாரின் பேரில் மின்வாரிய அதிகாரிகள் இந்த கோயிலின் மின் இணைப்பை துண்டித்தனர். இதனை கண்டித்து நாயக்கர் சமூகத்தைச் சார்ந்த பொதுமக்கள் பெருமாநல்லூர் சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. மேலும் சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் காவல்துறையினர் பேச்சுவார்த்தை ஈடுபட்டனர்.இதுகுறித்து கோவில் அறக்கட்டளை நிர்வாகி ரங்கசாமி தெரிவிக்கையில் இந்த கோயில் 300 ஆண்டுகள் பழமையானது. இந்தக் கோயிலில் குழந்தைகள், முதியவர்கள், வீட்டில் வளரும் கால்நடைகள் உடல்நிலை சரியில்லாத போது இந்த இந்த கோவிலுக்கு வந்தால் உடனடியாக நிவாரணம் கிடைக்கும் மேலும் இந்த கோயிலில் பல வருடங்களாக 90 ஊர்களைச் சேர்ந்தவர்கள் வழிபாடு செய்து வருகிறோம் இந்நிலையில் தனி நபர் (சமூக ஆர்வலர்) ஒருவர் அளித்த புகாரின் பேரில் கோயிலில் யாரும் இல்லாத நேரத்தில் மின் இணைப்பை துண்டித்துள்ளனர். எனவே துண்டித்த மின் இணைப்பை உடனடியாக வழங்க வேண்டும். இல்லையென்றால் தமிழகம் முழுவதும் பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என தெரிவித்தார்.

# வீட்டில் நுழைந்த 6 அடி நீள பாம்பை பிடித்த தீயணைப்புத் துறையினர்



ஊத்தங்கரை, டிச. 23-
கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அண்ணாநகர் பகுதியில் உள்ள மாவுத்சரிப்(54). என்பவர் வீட்டில் 6 அடி நீளம் கொண்ட பாம்பு புகுந்தது. இதனைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அவர், ஊத்தங்கரை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார். தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு துறை நிலைய அலுவலர் ராமமூர்த்தி தலைமையிலான வீரர்கள் வீட்டின் மேற்கூறை ஓட்டில் பதுங்கி இருந்த 6 அடி நீளமுள்ள சாரைபாம்பை போராடி பிடித்தனர். அதன் பின்னர் அருகே உள்ள ஒன்னரை காப்பு காட்டு வனப்பகுதியில் பத்திரமாக கொண்டு சென்று விட்டனர்.

# தஞ்சாவூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தஞ்சாவூர் டிசம்பர். 23-
தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பொது மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடந்தது.
கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்வி கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 571 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர்.
மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர் அதன் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களு க்கு உத்தரவிட்டார்.
அதனை தொடர்ந்து மாவட்ட கலெக்டர் திருவிடைமருதூர் வட்டம் திருப்பணி பேட்டை யினை சேர்ந்த பசுபதி சோமசுந்தரம் என்பவர் சவுதி அரேபியாவில் பணிபுரிந்த போது இறந்த தால் அவருக்கு சேர வேண்டிய சட்டப்படியான நிலுவைத் தொகை ரூபாய் 28,94,030 க்கான காசோலையினை அவரதுவாரிசுதாரர்களுக்கு வழங்கினார் .
கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன்,தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் செல்வம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட் டோர் நல அலுவலர் ஸ்ரீதர் ,சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை கலெக்டர் சௌமியா மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி அருகே பிளஸ் 1 மாணவி தற்கொலை விவகாரம் குற்றவாளிகளை கைது செய்யும் வரை உடலை வாங்க மறுப்பு!



நாகர்கோவில், டிச.23-
கன்னியாகுமரி மாவட்டம், மகாதானபுரம் நேதாஜி நகரை சேர்ந்த தற்கொலை செய்து கொண்ட மாணவி தீபிகாவின் தாயார் விஜயலட்சுமி மற்றும் உறவினர்கள் இன்று கலெக்டரிடம் அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது: எனக்கு 2 பெண் குழந்தைகள் உண்டு மூத்த மகள் தீபிகா கடந்த 17ம் தேதி அதே பகுதியைச் சேர்ந்த 3 பெண்கள் சேர்ந்து பொது இடத்தில் வைத்து ஆபாசமாக பேசி அவமானப்படுத்தியும், அடித்து காயப்படுத்தி தற்கொலைக்குதூண்டி உள்ளனர்.இதனால் எனது மகள் தீபிகா மனமுடைந்து கடந்த 18ம் தேதி காலை 7 மணிக்கு தற்கொலை செய்து கொண்டார். இது தொடர்பாக கன்னியாகுமரி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தோம் போலீசார் சந்தேகம் மரணம் என வழக்குபதிவு செய்திருந்ததால் இது சம்பந்தமாக எஸ்.பி.யிடம் புகார் மனு அளிக்கப்பட்டது. அந்த புகாரின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்பிரிவுகள் மாற்றி வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் இதுவரை அவர்கள் கைது செய்யப்படவில்லை
இந்த வழக்கில் உள்ள சந்திரா, கவிதா, அனுஷா ஆகிய மூன்று பேரையும் சட்டப்படி கைது செய்து நேர்மையான முறையில் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

# நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை சார்பில் ஆயிரம் நாட்களை நோக்கி தொடர்ந்து நடைபெற்று வரும் அன்னதான சேவை!



மதுரை, டிசம்பர்.23-
மதுரை நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் சார்பில் ஆயிரம் நாட்களை நோக்கி தொடர்ந்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை முன்பு பசித்தவர் அனைவரும் பயன் பெறும் வகையில் தொடர்ந்து 650 நாட்களாக தினமும் ஆயிரம் நபர்களுக்கு நட்சத்திர நண்பர்கள் ஸ்டார் குருசாமி தலைமையில் உணவு வழங்கி வருகிறார். இந்த நிகழ்வின் 650 ஆவது நாளை முன்னிட்டு மூவாயிரம் நபர்களுக்கு உணவு, தண்ணீர் பாட்டில், மற்றும் பழங்கள் வழங்கப்பட்டது. பொது மக்களுக்கு இடைவிடாமல் சேவை செய்து வரும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை நிறுவனர் ஸ்டார் குருசாமிக்கு அரசு ராஜாஜி மருத்துவ மனைக்கு வரும் பொதுமக்கள் உள்பட பல்வேறு தரப்பினரும் தங்கள் நன்றியை தெரிவித்து வருகின்றனர்.

# மதுரையில் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தொடர்ந்து நடைபெற்று வரும் உண்ணாவிரதப் போராட்டம்!



மதுரை, டிச.23 -
தமிழ்நாடு அரசு மருத்துவத்துறையில் ஒப்பந்த கூலி முறையினை ரத்து செய்வது, தேர்தல் வாக்குறுதி 356,ன் படி எம்ஆர்பி தொகுப்பூதிய செவிலியர்களை பணி நிரந்தரம் செய்வது சம வேலைக்கு சம ஊதியம் என்னும் உயர்நீதிமன்ற தீர்ப்பின் மீதான மேல்முறையீடு ரத்து செய்வது உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தி தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் சென்னையில் டிசம்பர் 18-ந்தேதி முதல் தொடர்ந்து நடைபெற்று வரும் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்து மதுரை மருத்துவ கல்லூரி வளாகத்தில் மாவட்டச் செயலாளர் மு.தாமரைச் செல்வி தலைமையில் டிசம்பர் 19-ந்தேதி முதல் தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு போராடி வருகின்றனர்.



திருவள்ளூரில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பிரகாசம் என்ற குட்டி தலைமையில் கடம்பத்தூரில் கிழக்கு ஒன்றிய இணை செயலாளர் ராஜ்குமார் மற்றும் கதிர், குமார், ஆகியோர் ஏற்பட்டில் தெற்கு மாவட்ட தலைமை அலுவலகத்தில் கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதனைத் தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு இலவச வேஸ்டி சேலைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கட்சியின் மாநில மாவட்ட மற்றும் கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




வேலூர் நாராயணி செவிலியர் கல்லூரியில் 2025 26 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்கள் விளக்கேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சியில் நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் டாக்டர் பாலாஜி வேலூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் ரோகினி தேவி திரைப்பட நடிகர் மெர்ச்சி சிவா மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர் கலையரசு ஆகியோர் உள்ளனர் ஆகியோர் உள்ளனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.